களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல உடனடியாக அடுத்த ஆண்டிலாவது திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாட்டில் உள்ள 374 ஒன்றியங்களில் இன்னமும் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்ட ஒன்றியங்கள் 180 இருக்கின்றன. அந்த 180 ஒன்றியங்களில் திருப்புவனம் ஒன்று. இந்த ஒன்றியங்களுக்கு படிப்படியாகத்தான் அலுவலர்கள் குடியிருப்பு கட்டப்படும்.

Meeting of Electricity Board and World Bank Officials.

* 594 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the World Bank Team had meetings with the representatives of the State Electricity Board in June 1972; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) விவாதத்தின்போது, அரசுக்கு மின்சார வாரியம் செலுத்தவேண்டிய வட்டி நிலுவைகளைத் தள்ளி விடுதல், தேய்மான நிதியைக்கடன் கரைப்புக்காகப் பயன்படுத்திக்கொள்ளுதல், கிராம மின் இணைப்புத் திட்டங்களுக்காக அரசு உதவித்தொகை அளித்தல், மின்சார வாரியத்துக்குக் கிடைக்கவிருக்கும் வருவாய் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டது.

Dr. H. V. HANDE : May I know whether the Government have also discussed with the representatives the inordinate delay in the supply of certain important parts which require foreign exchange to the Kalpakam Plant by the Canadian Company? If there is delay, may I know whether the Hon. Minister had discussed with the World Bank Team as to how to set at naught this delay and rectify things?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் கூறியபடி இந்த மூன்று விஷயங்கள்தான் விவாதிக்கப்பட்டன. மேற்கொண்டு விவாதிக்கப்படவில்லை.

1973 டிசம்பர் 3]

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Electricity whether the World Bank is going to give loan so as to implement the present schemes successfully in Tamil Nadu?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பொதுவாக வாரியத்திற்கு நிதி திரட்டப்படவேண்டுமென்ற கருத்து ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. விவாதிக்கப்பட்ட விஷயங்கள் நல்ல முறையில் இருப்பதாக மத்திய சர்க்கார் கூறியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: அந்தப் பேச்சு வார்த்தையின்போது வாங்கியுள்ள கடனுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பது கேட்கப்பட்டதா? அதற்கு உலக வங்கியின் பதில் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபற்றியும் பேசியிருக்கிறார்கள். ஆனால் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

மாயூரம் அருள்திரு இந்தளூர் கல்யாண மண்டபம்

*595 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அருள்திரு இந்தளூர் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தினைக் கட்டி முடிக்க அரசு அனுமதித்துள்ள சலுகைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சலுகைகள் எதும் கொடுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: மாயூரம் திரு. இந்தளூர் ரங்கநாத சுவாமி கோயிலில் இரண்டு லட்சத்து இருபதாயிரத்தில் ஒரு திருமண மண்டபம் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் அரசு 81 வது பசலிக்கு குத்தகை அளந்துவிட்டால் பாக்கியுள்ளவை தள்ளுபடி செய்யப்படும் எனச் சட்டம் கொண்டுவந்த காரணத்தினல் ஆலயத்திற்கு வரவேண்டிய 3 லட்ச ரூபாய் வருமானம் வர இயலாமல் போய்விட்டது. இதை மனதில்